21.03.2022

அசல் வழக்கு எண். 100/2018

வா.சா. 1 பாதர்வெள்ளை வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி.

மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம் 2497 ல் பதிவு செய்யப்பட்ட துணை விதிகளின் அலுவலக நகல் வா.சா.ஆ.1. 09.09.1981 ம் தேதி ராமையா மற்றும் ராமசந்திரன் பெயரில் தாவா சொத்து சீத்தாலெட்சுமி மில் சங்க கிளைக்காக வாங்கப்பட்ட கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 16.11.1970 ல் மேற்படி சொத்தை டாக்டர் ராமானுஜம் அய்யங்காரிடம் இருந்து பேச்சியம்மாள் வகையறா கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.3. 12.11.1974 ல் ராசுத்தேவருக்கு பேச்சியம்மாள், வனத்தாய் ஆகியோர் எழுதிக் கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.4. 13.11.1983 ம் தேதி ராமச்சந்திரன் அவர்கள் வா.சா.ஆ.2 ன் அசல் ஆவணங்களை பெற்றுக் கொண்டதற்காக கொடுத்த கடிதம் வா.சா.ஆ.5. 22.04.1984 ல் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் ராமச்சந்திரனை நீக்கி சீத்தாலெட்சுமி மில்லுக்கும் ராமசந்திரனுக்கும் சங்கம் சார்பாக கொடுக்கப்பட்ட அறிவிப்பு அசல் வா.சா.ஆ.6. 22.04.1984 ல் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தில் ராமச்சந்திரனை நீக்கி சீத்தாலெட்சுமி மில் ஜெனரல் மேனேஜருக்கு கொடுக்கப்பட்ட அறிவிப்பு அசல் வா.சா.ஆ.7. வாதிகள் சங்கத்தின் திருத்தப்பட்ட விதிகளையும் உட்படுத்தி தாக்கல் செய்யப்படும் சங்க விதிகள் அலுவலக நகல் வா.சா.ஆ.8. வாதிகள் சங்கத்தின் 2018 ம் ஆண்டிற்கான தீர்மான நோட்டு (23 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது) அசல் வா.சா.ஆ.9. இந்த ஆவணம் வழக்குரை மற்றும் முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லப்படாத ஆவணம் என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுதலின்பேரில் குறுக்கு விசாரணைக்காக வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தை வைக்கப்படுகிறது).

Sd/-Fathervellai

Sd/-N.Renuga,
Addl. District Munsif,
Thirumangalam.